

# பூமணி அம்மா அறக்கட்டளை



**சர்வதேச தமிழ் வானொலி பிரான்ஸ் - இலங்கை நிதி அனுசரனையில்**
**யா/செட்டித்தெரு மெ.மி.த.க.பாடசாலை நடாத்தும் - 2024**
**தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான**

**இல 01**

**பயிற்சிப் பரீட்சை**
**வினாத்தாள் – I**

**தரம் 05**

**பெயர்: ......................................** **1 மணித்தியாலம்**

**பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**

- ❖ உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
- ❖ மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ❖ இவ் வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே எழுதுக.**
- ❖ ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றில் ஒவ்வொரு வினாவுக்கு உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**
- ❖ செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

## விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| *பக்க இலக்கம்* | *பெற்ற புள்ளிகள்* |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| *மொத்தம்* | |
| ***இறுதிப் புள்ளிகள்*** | |
| *இலக்கத்தில்* | |
| *எழுத்தில்* | |

| | *முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்* |
|---|---|
| *முதலாவது பரீட்சகர்*<br>புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன் | <br>V/I/T |
| *இரண்டாவது பரீட்சகர்*<br>முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன். | <br>V/I/T |
| *மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்*<br>மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | <br>V/I/T/EMF |
| *பிரதான பரீட்சகர்*<br>மேற்பார்வை செய்தேன் இறுதிப் புள்ளிசரியாகும். | <br>V/I/T/CH |

Tamil Study


❖ **வினாக்களுக்குரிய விடைகளைத் தரப்பட்ட மூன்று விடைகளில் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

01. பெட்டியில் தரப்பட்டுள்ள படத்திற்கு மிகவும் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.



1)  2)  3) 

02. முதலில் தரப்பட்டுள்ள படத்தினை உருவாக்குவதற்கு இணைக்க வேண்டிய உருக்களைத் தெரிவு செய்க.




A


B


C


D

1) AB 2) CD 3) BD

03. கீழே தரப்பட்டுள்ள பிராணிகளை இரண்டு குழுக்களுக்குள் மாத்திரம் உள்ளடங்கக்கூடிய கூற்றைத் தெரிவு செய்க.



1) பால் குடித்து வளரும்
2) பூச்சி , விலங்குகள் கூட்டத்தைச் சேர்ந்தது
3) தாவர வகையிலான உணவுகளை உண்ணும்


04. பிள்ளைகள் 5 பேர் வரிசையாக நிற்கின்றனர்.






மாணவர்களை உயரம் கூடிச்செல்லும் வகையில் ஒழுங்குமைப்பதற்கு குறைந்தளவு எத்தனை மாற்றங்களை ஏற்படுத்தவேண்டும்?

1) 1 2) 2 3) 3

05. வினா இலக்கம் 5 , 6 ஆகிய வினாக்களுக்கு கோலத்தை இனங்கண்டு விடையைத் தெரிவு செய்க.



?
.......................

1)  2)  3) 

TamilStudy

06. 

?
.......................


1) 

2) 


3) 


07. மேசை ஒன்றில் கதை புத்தகம் , பாடல் புத்தகம் , சிறுவர் காட்டூன் புத்தகம் ஆகிய புத்தகங்கள் இருக்கின்றன. குமார் கதை புத்தகம் , சிறுவர் காட்டூன் வாசிக்க விரும்புகிறான். மாலா கதை புத்தகத்தினை மாத்திரம் வாசிக்க விரும்புகிறாள். மயூரி மூன்று புத்தகங்களையும் வாசிக்க விரும்புகிறாள். மூவரினதும் விருப்பத்திற்கேற்ப புத்தகங்களைப் பகிர்ந்து கொடுத்தால் குமாருக்கு கிடைக்கும் புத்தகம் என்ன?
1) சிறுவர் காட்டூன் 2) பாடல் புத்தகம் 3) கதைப்புத்தகம்


08. கோலத்தை இனங்கண்டு இடைவெளிக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.




?
.......................

1) 


2) 


3) 



09. தட்டொன்றில் ஒரே நேரத்தில் இரண்டு ரொட்டிகளைச் சுடலாம். ஒரு ரொட்டியை ஒரு பக்கம் சுடுவதற்கு 4 நிமிடங்கள் ஆகின்றன. இந்த தட்டில் 5 ரொட்டிகளைத் தயாரிப்பதற்கு எடுக்கும் காலம் எவ்வளவு?
1) 24 நிமிடம் 2) 32 நிமிடம் 3) 20 நிமிடம்


10. தவறான ஒழுங்கில் காணப்படும் விடையைத் தெரிவு செய்க.
1) மில்லிமீற்றர் , சென்ரமீற்றர் , மீற்றர் , கிலோமீற்றர்
2) தங்கை , நான் , அக்கா , அம்மா , பாட்டி
3) எழுத்து , சொல் , கட்டுரை , பந்தி , வாக்கியம்

11. யாழ் மாவட்டத்தில் நடைபெறுகின்ற சதுரங்கப் போட்டியில் தமிராவே எப்போதும் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டிருந்தாள். அதற்கான காரணமாக இருக்கக் கூடியது பின்வருவனவற்றுள்
1) தமிராவைத் தவிர வேறு யாரும் முதலிடத்தைப் பெற முடியாது.
2) போட்டியில் பங்குபற்றுபவர்களில் தமிராவே திறமையாக விளையாடுகின்றமை
3) போட்டி யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதால் அவள் முதலிடத்தைப் பெறுகின்றாள்.

12. ஒரே அளவான குச்சிகளை மட்டும் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட வடிவம் எது?

1) 

2) 

3) 

Tamil Study


13. குமாரிடம் ஒரு பக்க நீளம் 12cm கொண்ட கம்பியினால் தயாரிக்கப்பட்ட சதுரம் ஒன்று இருந்தது. சதுரத்தின் முழுமையான கம்பியை நீளமாக நீட்டி பாதியாக வெட்டிய பின்னர் ஒரு துண்டை சமனான நீளங்களைக் கொண்ட முக்கோணி ஒன்று தயாரிக்கப்பட்டது. முக்கோணியின் ஒரு பக்கம் நீளம் யாது?
1) 6cm  2) 8cm  3) 12cm

14. பாக்கு மரமொன்றில் உயரம் 34 அடிகள் பாக்கு மரத்தில் அடிகள் ஏறும் ஏரகன் 1அடி சறுக்கிக் கீழ் வருகிறான். மரத்தை முழுமையாக ஏறி நிறைவு செய்ய வேண்டிய ஏரகன் மொத்தமாகக் குறைந்தது எத்தனை தடவைகள் முயற்சிக்க வேண்டும்.
1) 10  2) 11  3) 12

15. அக்கா 16 பூக்கள் பறிக்கும் போது தங்கை 8 பூக்கள் பறிக்கின்றாள். தங்கை 4 பூக்கள் பறிக்கும் போது அண்ணா 12 பூக்கள் பறிக்கின்றார். கூடிய வேகத்திலும் குறைந்த வேகத்திலும் பூ பறிக்கும் இருவர் முறையே,
1) அக்கா , அண்ணா  2) அண்ணா , தங்கை  3) அண்ணா , அக்கா

16. “ஆற்றிலே போட்டாலும் அளவறிந்து போடு” இப்பழமொழி வெளிப்படுத்தும் கருத்து
1) வீண் செலவு செய்யினும் அக்கணக்கையும் அறிந்திருத்தல் வேண்டும்.
2) ஆற்றிலே போடும் போது அளந்து பார்த்தபின் போடுதல் வேண்டும்.
3) எவருக்காயினும் அளவுக்கு மீறி உதவி செய்யக் கூடாது.

17. சாமினா 2020 ஆண்டு மாசி மாதம் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிறந்தாள். அவள் தனது பிறந்தநாள் கொண்டாட்டத்தை எந்த ஆண்டின் என்ன கிழமையில் முதல் தடவை கொண்டாடுவாள்?
1) 2024 செவ்வாய்  2) 2021 வியாழன்  3) 2024 புதன்

18. 
அருகே காணப்படுகின்ற செவ்வகமானது நான்கு சம அளவான சதுர வடிவங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. செவ்வகத்தின் பரப்பளவு 256 சதுர சென்ரிமீற்றர் ஆகும். எனின் சிறிய சதுரம் ஒன்றின் நீளம் யாது?
1) 10cm  2) 7cm  3) 8cm

19. வெற்றிடங்களில் வரவேண்டிய சொற்கள் முறையே,
........................................ போல் கூடி வாழ வேண்டும்.
........................................ போல் துள்ளி ஓட வேண்டும்.
........................................ போல் எங்கும் செல்ல வேண்டும்.
........................................ போல் நன்மை பொழிய வேண்டும்.
1) காகம் , கன்று , மேகம் , மழை
2) மயில் , மான் , மழை , மேகம்
3) காகம், முயல் , வெள்ளம் , வெயில்


20. கரீம் , ரவி ஆகிய இருவரின் வயதுகளின் கூட்டுத்தொகை 54 ஆகும். ரவியைவிட கரீம் 8 மடங்கு அதிகமாக இருந்தான். ரவியின் வயது எத்தனை?
1) 6  2) 3  3) 4

21. மாலாவிடம் 7 மாம்பழங்களும் மாலதியிடம் 9 மாம்பழங்களும் மதுமிதாவிடம் 5 மாம்பழங்களும் இருந்தன. அனைத்து மாம்பழங்களையும் மூவரும் சமமாகப் பிரித்துக் கொண்டனர். இவ்வாறு சமமாகப் பிரித்த பின்னர் இலாபம் , நட்டம் அடைந்த இருவரும் முறையே,
1) மாலா , மாலதி  2) மாலதி, மதுமிதா  3) மதுமிதா , மாலதி

22. சுகததாச விளையாட்டுத் திடலில் 200m ஓட்ட நிகழ்ச்சிக்காக 8 வீராங்கனைகள் பங்கு பற்றியிருந்தனர். அவர்கள் எண்மரும் ஒருவருக்கொருவர் கைலாகு செய்து கொண்டனர். எனின் அங்கு இடம் பெற்ற கைலாகுகளின் எண்ணிக்கை யாது?
1) 56  2) 28  3) 14

Tamil Study

23. இரு எண்களின் பெருக்கல் தொகை 60 ஆகும். அவ்விரு எண்களினதும் கூட்டுத்தொகை 17 ஆகும். அவற்றின் இடையிலான வித்தியாசம் 7 ஆகும். எனின் அவ்விரு எண்களும் எவை?
1) 9 , 8 2) 6 , 10 3) 12 , 5

24. 
ஆரணன் உருவில் காட்டப்பட்ட கனவுரு வடிவத்தை ஈர்க்குக் குச்சிகளைப் பயன்படுத்தி தயாரித்தான். அதற்காக நீளப்பகுதிக்கு 40cm நீளமும் அகலப்பகுதிக்கு 25cm நீளமும் உயரப்பகுதிக்கு 20cm நீளமும் ஆக அளவுள்ள ஈர்க்குகளைப் பயன்படுத்தினான். அவன் பயன்படுத்திய ஈர்க்குகளின் மொத்த நீளம் யாது?
1) 480cm 2) 400cm 3) 340cm

25. எல்லையை அறிந்து அங்குமிங்கும் செல்வாள். துன்பத்திலும் இன்பத்திலும் எப்போதும் நனைவாள். விபத்துக்கள் ஏற்பட ஒரு போதும் இடமளியாள் கதவுகள் இரண்டையும் விரைவில் மூடிவிடுவாள். இவ்விடுகதை குறிப்பது?
1) கரம் 2) கண் 3) வாய்

26. தருண் ஐந்து இலக்கங்களைக் கொண்ட எண் ஒன்றை எழுதியிருந்தான். இரண்டாம் இலக்கமும் கடைசி இலக்கமும் ஒற்றை எண் ஆகும். முதலாம் இலக்கமும் மூன்றாம் இலக்கமும் இரட்டை எண்களாகும். நான்காம் இலக்கம் மூன்றாம் இலக்கத்திலும் 5 குறைவாகும். எனின் தருண் எழுதிய எண் யாது?
1) 43169 2) 73165 3) 43617

27. கமலா இரு மணிக்கூடுகளை எடுத்து அதில் ஒன்றை 6 மணித்தியாலத்திற்கு ஒரு தடவையும் மற்றைய மணிக்கூட்டை 8 மணித்தியாலத்திற்கு ஒரு தடவையும் அலாரம் அடிக்குமாறு ஒழுங்கு செய்திருந்தாள். அவள் முதல் நாள் காலை 6.00 மணிக்கு இரு மணிக்கூடுகளையும் அலாரம் அடிக்குமாறு செய்தாள். எனின் மீண்டும் எப்போது இரு மணிக்கூடுகளும் ஒரே நேரத்தில் அலாரம் அடிக்கும்?
1) மறுநாள் மதியம் 12.00 மணி
2) மறுநாள் காலை 6.00 மணி
3) அதே நாள் மாலை 6.00மணி

28. எனது அம்மாவின் உடன் பிறந்தவருடன் அவரின் வீட்டிற்குச் சென்றேன். நான் அவரின் மருமகனோ மருமகளோ அல்ல. எனின் நான் யாருடன் சென்றிருந்தேன்.
1) அம்மாவின் உடன் பிறந்த சகோதரியுடன்
2) அம்மாவின் உடன் பிறந்த சகோதரனுடன்
3) அம்மாவின் அம்மாவுடன்

29. முப்பத்தொரு நாட்களை மட்டும் கொண்ட மாதங்கள்
1) தை , பங்குனி , புரட்டாதி , கார்த்திகை
2) சித்திரை , ஆனி , மாசி , கார்த்திகை
3) பங்குனி , வைகாசி , ஆவணி , மார்கழி

30. தரப்பட்டுள்ள நான்கு கட்டங்களிலும் எக்குறியீடுகளை இவதன் மூலம் சரியான முடிவைப் பெற முடியும்

3 ☐ 2 ☐ 4 ☐ 13 ☐ 3

1) + × = + 2) × - = - 3) × + = -

31. பரீட்சை மண்டபம்ஒன்றின் முன்பாகக் காணப்பட்ட கரும்பலகையில் கீழே உள்ளவாறு எழுதப்பட்டிருந்தது இதன்படி எழுதப்பட்ட விடயமானது.

| |
|---|
| பரீட்சை ஆரம்பமாவதற்கு முப்பது நிமிடங்களுக்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு வருகை தந்து ஆசனங்களில் அமருதல் வேண்டும். பரீட்சை ஆரம்பத்ததன் பின்னர் பரீட்சார்த்திகள் எவரும் உள்ளே அனுமதிக்கப்பட மாட்டார்கள்.<br>பரீட்சை ஆணையாளர் நாயகம் |

1) அறிவித்தல் 2) அறிவுறுத்தல் 3) கட்டளை



www.e-kalvi.com
Tamil Study

32. ஆண் பிள்ளைகளில் பெரும்பாலானவர்கள் குறும்புக்குணம் உடையவர்கள். வியாசன் ஓர் ஆண் பிள்ளையாவான். இதன் அடிப்படையில் "வியாசன் குறும்புக்குணம் மிக்கவன்" எனும் முடிவை எடுப்பது
1) கூறமுடியாது 2) சரியானது 3) தவறானது

❖ **33 ஆம் 34ஆம் வினாக்களுக்கத் தரப்பட்ட பாடலை வாசித்து விடையைத் தெரிக.**

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் - மன்னனுக்குத்
தன் தேசமல்லாற் சிறப்பில்லை - கற்றோர்க்கும்
சென்ற இடமெல்லாம் சிறப்புண்டு

33. இப்பாடல் எதன் சிறப்பைப் பற்றிக் கூறுகின்றது?
1) மன்னனின் சிறப்புப் பற்றியது
2) கல்வியின் சிறப்புப் பற்றியது
3) தேசத்தின் சிறப்புப் பற்றியது

34. இப்பாடல் வெளிப்படுத்தும் கருத்துக்களில் ஒன்றல்லாதது
1) மன்னனுக்கு அவனது தேசத்தில் மட்டுமே சிறப்புண்டு
2) கல்வி கற்றவன் சென்ற இடமெங்கும் சிறப்புப் பெறுகின்றான்.
3) மாசறக் கற்றவனையும் மன்னனையும் விட தேசமே சிறப்புப் பெறுகின்றது.

35. பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி நிகழ்வின் போது கொடிகள் ஏற்றப்படும் ஒழுங்கு முறையைச் சரியாகக் கொண்ட விடை
1) தேசியக்கொடி , இல்லக் கொடிகள் , பாடசாலைக்கொடி
2) பாடசாலைக்கொடி , இல்லக்கொடி , தேசியக்கொடி
3) தேசியக்கொடி , பாடசாலைக்கொடி , இல்லக்கொடி

36. நான்கு நண்பர்கள் சேர்ந்து ஒரே வேகத்தில் நடந்து மலையேற ஆரம்பித்தனர். அவர்கள் நால்வரும் மலை உச்சியை அடைந்த போது 6 நாட்கள் சென்றிருந்தன. எனின் ஒருவர் மலை ஏறுவதற்கு எத்தனை நாட்கள் எடுத்தன?
1) 1½ நாட்கள் 2) 6 நாட்கள் 3) 5 நாட்கள்

37. | 3 , 13 , 33 , ....... , 103 | கோலத்திற்கு ஏற்ப வெற்றிடத்தில் வரவேண்டிய எண் யாது?
1) 43 2) 53 3) 63

38. நாளொன்றுக்கு ரூபாய் 5 வீதம் சேமித்து வரும் சுமதியிடம் ஒரு திங்கட்கிழமை ரூபாய் 30 உம் நாளொன்றுக்கு ரூபாய் 10 வீதம் செலவு செய்து வரும் வசந்தியிடம் அதே தினம் ரூபாய் 90 உம் இருந்தன. இருவரிடமும் உள்ள பணத்தொகைகள் சமமாவது எந்த நாளிலாகும்?
1) புதன்கிழமை 2) வெள்ளிக்கிழமை 3) சனிக்கிழமை

39. 20 மீற்றர் நீளமும் 10 மீற்றர் உயரமும் உடைய சுவருக்குப் பூசுவதற்கு 2லீற்றர் தீந்தை தேவைப்படுகின்றது எனின் 40 மீற்றர் நீளமும் 5 மீற்றர் உயரமும் உடைய சுவருக்குப் பூசுவதற்கத் தேவையான தீந்தையின் அளவு யாது?
1) 3 லீற்றர் 2) 2லீற்றர் 3) 5லீற்றர்

40. புள்ளிகள் இடப்பட்ட தாயக்கட்டையொன்று 24 தடவைகள் உருட்டப்பட்ட போது விழுந்த தடவைகள் தரப்பட்டுள்ளன. அதனை அவதானித்து வெற்றிடங்களில் வரவேண்டிய புள்ளிகள் விழுந்த தடவைகளின் எண்ணிக்கைகளின் முறையே தெரிக.

| புள்ளிகள் | ● | ●● | ●●● | ●●●● | ●●●●● | ●●●●●● |
|---|---|---|---|---|---|---|
| விழுந்த தடவைகள் | 6 | 2 | ........... | 7 | .......... | 2 |

1) 4 , 3 2) 4 , 6 3) 3 , 5

(40x2½= 100புள்ளிகள்)

Tamil Study



# பூமணி அம்மா அறக்கட்டளை



**சர்வதேச தமிழ் வானொலி பிரான்ஸ் - இலங்கை நிதி அனுசரனையில்**
**யா/செட்டித்தெரு மெ.மி.த.க.பாடசாலை நடாத்தும் - 2024**
**தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான**

**இல 01**

**பயிற்சிப் பரீட்சை**
**வினாத்தாள் – II**

**தரம் 05**

பெயர்: ..................................... **1 மணித்தியாலம் 15 நிமிடம்**

**பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**

- ❖ உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- ❖ மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ❖ இவ் வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உட்பகுதிகளும் உள்ளன.
- ❖ **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே எழுதுக.**
- ❖ விடைகள் எழுதப்படவேண்டிய வினாக்களின் விடைகளை **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
- ❖ விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
- ❖ செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

## விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| *பக்க இலக்கம்* | *பெற்ற புள்ளிகள்* |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| *மொத்தம்* | |
| *இறுதிப் புள்ளிகள்* | |
| *இலக்கத்தில்* | |
| *எழுத்தில்* | |

| | *முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்* |
|---|---|
| *முதலாவது பரீட்சகர்* புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன் | V/I/T |
| *இரண்டாவது பரீட்சகர்* முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன். | V/I/T |
| *மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்* மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | V/I/T/EMF |
| *பிரதான பரீட்சகர்* மேற்பார்வை செய்தேன் இறுதிப் புள்ளிசரியாகும். | V/I/T/CH |

Tamil Study

**01.** பின்வரும் பந்தியைத் துணையாகக் கொண்டு வினாக்களிற்கு விடை தருக.
நீலவானை செந்நிறமாக்கிய கதிரவன் தன் பொற்கரங்களை நீட்டிய பனித்துளிகளைத் தொட்டுச் செல்கிறான். கதிரவனின் பொற்கரம் பட்டதும், இலைகளின் நடுவே இரத்தினக்கற்களாக மின்னிய பனித்துளிகள் மெல்லமெல்ல மறையத் தொடங்கின.

1) ஒரு நாளில் எவ்வேளை பற்றி பந்தியில் கூறப்பட்டுள்ளது?
.......................................................................................................................................
2) பந்தியிலுள்ள அடுக்குத் தொடர் ஒன்றை எழுதுக.
.......................................................................................................................................
3) பந்தியில் கூறப்பட்டுள்ள சினைப் பெயர் ஒன்றினைத் தருக?
.......................................................................................................................................
4) உயர்திணை, ஆண்பால், நிகழ்காலச் சொல்லொன்றினை எழுதுக.
.......................................................................................................................................
5) ஒற்றைக் கொம்பும் அரவும், விசிறியும் , மட்டும் உள்ள சொல்லினை எழுதுக.
.......................................................................................................................................
6) “பொற்கரங்களை” இச்சொல்லை பிரித்து எழுதுக.
.......................................................................................................................................

(6புள்ளிகள்)

**02.** இடைவெளிக்கு வரவேண்டிய சொல்லினைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.
1) கொரோனா நோய் பற்றி ....................................................செய்தார்கள். (ஆராய்ச்சி , ஆராட்சி)
2) குமார் படித்துப்..............................................சென்றான். (பல்கலைக்கழகம் , பள்கலைக்கழகம்)

(5புள்ளிகள்)

**03.** தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியங்கள் எழுதுக.
1) நல்ல / கற்றுக்கொள் / என்னிடம் / அடக்கத்துடன் / அனுபவசாலியான / பேசக் / நீ
.......................................................................................................................................

(1புள்ளிகள்)

**04.** பின்வரும் வாக்கியத்தை பன்மை வாக்கியமாக மாற்றி எழுதுக.
1) காகம் பறந்து சென்றது.
.......................................................................................................................................
2) நட்சத்திரம் வானில் மின்னியது.
.......................................................................................................................................

(2புள்ளிகள்)

**05.** பொருத்தமான இடங்களில் நிறுத்தக் குறிகளை இடுக.
1) ஆதிகாலத்தில் தரைமார்க்கமாகச் செல்வதற்கு மாட்டுவண்டி குதிரை வண்டி ஆகியவற்றைப் பயன்படுத்தினர்.

(1புள்ளிகள்)

**06.** தொனியை எழுதுக.
1) கிளி பேசும் என்பது போல எருமை .......................................
2) கோழி - கொக்கரிக்கும் , குரங்கு ............................................

(2புள்ளிகள்)

**07.** பின்வரும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பழமொழியைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.
1) உப்பிட்டவரை ..............................................................................
2) ............................................................................... பாலும் புளிக்கும்

(2புள்ளிகள்)

**08.** பேச்சு வழக்குச் சொற்களை எழுத்து வடிவில் மாற்றுக.
1) கத்திரிக்கோல் ..........................................
2) சீயாக்காய் ..........................................

(2புள்ளிகள்)

**09.** தனிச் சொல்லை எழுதுக.
1) ஐம்பதாவது ஆண்டில் இறுதியில் கொண்டாடப்படும் விழா எது?.......................................................
2) எழுபத்தைந்தாவது ஆண்டின் இறுதியில் கொண்டாடப்படும் விழா எது? .........................................

(2புள்ளிகள்)



Tamil Study

**10.** தனி வாக்கியத்தை தொடர் வாக்கியங்களாகவும் , தொடர் வாக்கியங்களை தனி வாக்கியமாகவும் மாற்றி எழுதுக.

1) குமரன் கோயிலுக்குச் சென்று கடவுளை வணங்கினான்.

.......................................................................................................................................

2) மாறன் சந்தைக்குச் சென்றான். மாறன் காய்கறிகளை வாங்கினான்.

.......................................................................................................................................

(2புள்ளிகள்)

**11.** மரபுத்தொடர் வெளிப்படுத்தும் கருத்தினை எழுதுக.

1) முன்னுக்கு வருதல் ..........................................................................................

2) தட்டிக் கழித்தல் ..........................................................................................

(1புள்ளிகள்)

**12.** தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களுக்கு உரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

1) Sky - .................................... 2) Sun - ....................................

(2புள்ளிகள்)

**13.** தரப்பட்டுள்ள தமிழ் சொல்லுக்குரிய ஆங்கில எழுத்துக்களிலேயே எழுதுக.

1) வானொலிப் பெட்டி - .................................... 2) சீப்பு - ....................................

(2புள்ளிகள்)

**14.** கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.

1) book / reading / am / a / I - ..........................................................................................

2) father / is / This / my - ..........................................................................................

(2புள்ளிகள்)

**15.** "பரவியா" என்ற சிங்களச் சொல்லின் கருத்தைத் தமிழில் எழுதுக.

.......................................................................................................................................

(1புள்ளிகள்)

❖ **சரியான விடைகளைக் கணித்து எழுதுக.**


16. சொற்களில் எழுதுக.

17009 - .......................................................................................................................

17. 


டியிற்றல் நேரத்தை கடிகார முகத்தில் குறித்துக் காட்டுக.

**01:50**

18. 


தரப்பட்ட சிறிய பாத்திரத்தினை வைத்து, பெரிய பாத்திரத்தை நிரப்புவதற்கு சிறிய பாத்திரத்தினால் எத்தனை தடவைகள் ஊற்ற வேண்டும்?

..........................................................................................

19. இவ்வுருவில் காணப்படும் சமச்சீர் அச்சுக்கள் எத்தனை? அவற்றை வரைந்து காட்டுக.?



20. 8m நீளமுள்ள நாடாவிலிருந்து 60cm நீளமுள்ள ஒன்பது நாடாத் துண்டுகள் வெட்டப்பட்டன. எனின் எஞ்சியுள்ள நாடாவின் நீளம் யாது?

..........................................................................................

Tamil Study

21. பின்வரும் பூரணமற்ற சிட்டையைப் பூரணப்படுத்துக.

| பொருள் | எண்ணிக்கை | ஒன்றின் விலை | பணம் |
|---|---|---|---|
| புத்தகம் | 5 | ரூபாய் 525.00 | ......................... |
| கொப்பி | 3 | ......................... | ரூபாய் 324.00 |
| பேனை | ........... | ரூபாய் 24.00 | ரூபாய் 72.00 |
| பென்சில் | 6 | .......................... | ரூபாய் 66.00 |

22. பேருந்தொன்று பயணத்தை முடிக்கும் போது வாகனமானி பின்வரும் இலக்கங்களைக் காட்டியது.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5 | 3 | 0 | 0 | 3 | 3 | km |

அந்தப் பேருந்து 45km பணத்தை ஆரம்பிக்கும் போது வாகனமானியில் உள்ள இலக்கங்கள் எவ்வாறு காணப்பட்டிருக்கும்?

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

23. i) பி.ப 2.55 மணிக்கு புறப்பட விருந்த பேருந்து 45 நிமிடங்கள் தாமதமாகவே புறப்பட்டு நான்கு மணித்தியாலம் நாற்பது நிமிடம் பயணம் செய்து கண்டியைச் சென்றடைந்தது. எனின் பேருந்து புறப்பட்ட நேரம் யாது?

.......................................................................................................................

ii) பேருந்து கண்டியைச் சென்றடைந்த நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

.......................................................................................................................

24. ரூபன் 860g உள்ள 8 சீனிப் பொதிகளை ஒரு பொதியாக்கினான். தற்போது அந்த ஒரு பொதியில் காணப்படும் சீனியின் அளவினை kg , g இல் தருக.

.......................................................................................................................

25. சுமதி 140 பலூன்களை வைத்திருந்தாள். அவற்றில் 68 பச்சை நிறமானவை. 47 நீல நிறமானவை மிகுதி சிவப்பு நிறமானவை எனின் அவளிடமிருந்த சிவப்பு நிற பலூன்கள் எத்தனை?

.......................................................................................................................


26. 


இவ்வுருவில் காணப்படும் புள்ளிக் கோட்டின் மூலம் வெட்டும் போது

i) தோன்றும் தளவடிவம் யாது? ..........................................

ii) தோன்றும் உருவில் காணப்படும் உச்சிகள் எத்தனை? ....................................

27. உரு Aயில் நிழற்றப்பட்ட பகுதிக்கு சமமாக உரு B யில் நிழற்றிக் காட்டுக.

உரு A 

உரு B 

28. 21$l$ நீர் கொள்ளத்தக்க பாத்திரமொன்றில் 12$l$ நீர் உள்ளது. அதற்குள் மேலும் 12$l$ 550m$l$ நீர் ஊற்றப்பட்டது. பாத்திரத்திலிருந்து வெளியேறும் நீரின் அளவு யாது?

.......................................................................................................................

29. ஐந்து நண்பர்கள் ஆளுக்கு ரூபா 200.00 வீதம் சேர்த்து ரூபா 400.00 இற்கு மாம்பழங்களும், ரூபா 325.00 இற்கு பலாப்பழமும் , ரூபா 100.00 இற்கு வாழைப்பழமும் வாங்கி மீதிப் பணத்தை சமமாகப் பிரித்துக் கொண்டனர். எனின் மீதிப் பணத்தில் ஒருவர் பெற்றுக் கொண்ட பணம் யாது?

ரூபாய் .......................................................................................

(15x2=30புள்ளிகள்)

Tamil Study

❖ **30 தொடக்கம் 59 வரையான வினாக்களுக்கு தரப்பட்ட விடைகளில் இருந்து சரியான விடையினைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30. மனதை இதப்படுத்தும் செயற்பாட்டில் திடசித்தம் எத்தனையாவது செயற்பாடாகும்?
1) இரண்டாவது 2) மூன்றாவது 3) நான்காவது

31. கடலுணவில் அதிகம் அடங்கியுள்ள போசணைக் கூறு எது?
1) கல்சியம் 2) அயடின் 3) குளோரின்

32. கிராமம் ஒன்றிற்கு பொறுப்பாக உள்ள நிர்வாக அதிகாரி யார்?
1) ஆளுநர் 2) அரசாங்க அதிபர் 3) கிராம அலுவலர்

33. "வுளு சுத்தம் செய்தல்" எந்த மதத்தினரது கலாசார பழக்க வழக்கமாகும்?
1) இந்து 2) கிறிஸ்தவம் 3) இஸ்லாம்

34. தேசியக் கொடியில், தேசிய ஒருமைப்பாட்டைக் குறிக்கும் நிறம் யாது?
1) மஞ்சள் 2) பச்சை 3) செம்மஞ்சள்

35. தொற்று நோய்கள் சில தருக.
1) டெங்கு , அம்மை , தடிமன் , கொரோனா
2) வாந்திபேதி , வயிற்றோட்டம் , குடற்புண்
3) மலேரியா , டெங்கு , யானைக்கால்

36. காய் , கதிர் , பொத்தி என இனங்காணத்தக்கவை முறையே குறிப்பிடுக.
1) தேங்காய் , பலா , மா 2) பயிற்றை , நெல் , சோளம் 3) போஞ்சி , கௌப்பி , கத்தரி

37. இலங்கையை போர்த்துக்கேயர் கைப்பற்றிய ஆண்டு எது?
1) 1505 2) 1658 3) 1796

38. புனித வெள்ளரசு கிளையை இலங்கைக்கு கொண்டு வந்தவர் யார்?
1) மகிந்ததேரர் 2) தேவநம்பியதீசன் 3) பிக்குனி சங்கமித்தை

39. நெற் செய்கைக்கு உகந்த மண் எது?
1) இருவாட்டி மண் 2) களி மண் 3) மணல் மண்

40. மண்ணரிப்பைத் தடுப்பதற்கான செயற்பாடுகளில் ஒன்றல்லாதது
1) நில மேற்பரப்பில் கல் பரப்புதல்
2) பாரிய மரங்களை வெட்டி அப்புறப்படுத்தல்
3) தேங்காய் உரிமட்டை அடுக்குதல்

41. வீசா அனுமதிப் பத்திரம் கட்டாயம் பெற வேண்டியவர்கள் யார்?
1) வெளி மாவட்டம் செல்ல வேண்டியவர்கள்
2) வெளிநாடு செல்ல இருப்பவர்கள்
3) வைத்தியசாலையில் நோயாளிகளைப் பார்வையிடச்செல்பவர்கள்

42. கறிக்கு சுவையூட்ட உதவும் இலைகள் சில தருக.
1) இஞ்சி , மஞ்சள் 2) கறுவா , லவங்க 3) கறிவேப்பிலை , றம்பை

43. ஆரம்ப காலத்தில் புகையிரதத்தை இயக்குவதற்கு எவ் எரிபொருளைப் பயன்படுத்தினர்?
1) பெற்றோல் 2) நிலக்கரி 3) மின்சாரம்

44. கறையான் அரிக்காத தாவரங்கள் தாவரங்கள் எவை?
1) தேக்கு , கருங்காலி 2) பனை , தென்னை 3) மா , வேம்பு

45. மஞ்சள் நிறப் பின்னனியில் கருமை நிறத்தில் ஒருவரின் படம் உள்ள வீதிக் குறியீடு குறிப்பிடுவது யாது?
1) பாதசாரிகள் கடவை முன்னால்
2) சிறுவர் கடவை முன்னால்
3) பஸ் தரிப்பு நிலையம்

46. தாவரப் பாகத்தை மட்டும் உணவாக உட்கொள்ளும் பிராணி எது?
1) பாம்பு 2) கோழி 3) மாடு



Tamil Study

47. கரடு முரடான மேற்பரப்புக்களை கொண்ட வித்துக்கள் எவை?
1) பயறு, உழுந்து , கடுகு 2) பாகல் , பப்பாசி , மிளகு 3) நெல் , குரக்கன் , திணை

48. "பிரைல்" எழுத்து முறையினைப் பயன்படுத்துபவர்கள்
1) காது கேளாதவர்கள் 2) அதி புத்திசாலிகள் 3) கண் தெரியாதவர்கள்

49. ஆபத்து வேளையில் வாலை அறுத்து விட்டு ஓடும் பிராணிகள் எவை?
1) ஆமடில்லா , அட்டை 2) பல்லி , அறணை 3) நத்தை , ஆமை

50. நுளம்பினால் பரவும் நோய் அல்லாதது எது?
1) டெங்கு 2) நெருப்புக்காய்ச்சல் 3) சிக்கன்குனியா

51. இலங்கையிலே பொருட்களின் தரத்தினை உறுதிப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படுத்தும் குறியீடு யாது?
1) ISO 2) ISBN 3) SLS

52. செக்கு பயன்படுத்தப்படும் கைத்தொழில் எது?
1) எண்ணெயாட்டல் 2) தச்சுவேலை 3) மேசன் வேலை

53. பண்டைய காலத்தில் நெருப்பில் வாட்டி பாதுகாக்கப்பட்ட உணவு வகை யாது?
1) மீன் 2) தேசிக்காய் 3) இறைச்சி

54. பருவகாலச் சீட்டினை வழங்கும் திணைக்களம் யாது?
1) சுகாதாரத் திணைக்களம்
2) இலங்கை போக்குவரத்துச் சபை
3) கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

55. அதிவேக நெடுஞ்சாலையைக் குறித்துக் காட்ட பயன்படும் எழுத்து யாது?
1) B 2) A 3) E

56. ஐக்கிய நாடு உலக மரபுரிமையை தீர்மானிக்கும் நிறுவனம் யாது?
1) யுனிசெவ் 2) யுனஸ்கோ 3) யு.என்.எச்.சி.ஆர்

57. மைதான நிகழ்ச்சியாக அமைவது எது?
1) மரதன் 2) அஞ்சல் 3) தட்டு எறிதல்

58. ஆள் அடையாள அட்டையை பெற்றுக் கொள்வதற்கு செல்ல வேண்டிய இடம் யாது?
1) கிராம அலுவல்கள் அலுவலகம்
2) பொலிஸ் நிலையம்
3) ஆட்பதிவுத் திணைக்களம்

59. நீராவியால் சமைக்கப்படும் உணவு அல்லாதது எது?
1) பிட்டு 2) அப்பம் 3) இட்லி

(15x2=30புள்ளிகள்)

60) **"மின்சாரத்தினால் நாம் பெறும் பயன்கள்"** என்ற தலைப்பில் மூன்று கருத்துள்ள வாக்கியத்தை எழுதுக. எழுவாய், பயனிலை, தொடர்புகளும் எழுத்துக் கூட்டல்களும் சரியாக அமைதல் வேண்டும்.(ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்)

1. ..............................................................................................................
..............................................................................................................
2. ..............................................................................................................
..............................................................................................................
3. ..............................................................................................................
..............................................................................................................

(3x2= 6புள்ளிகள்)



Tamil Study